பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 11 றஜப் 7 இதழ்: 134
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-6-77

## ரயில்வே 'கார்ட்'மாருக்கு திடீர் சுகவீனம்

### சிலமணி நேரத்தில் வழமைபோல் சேவை

(கொழும்பு)
ரயில்வே கார்ட்மார் நேற்று திடீரென சுகயீன லீவில் சென்றமையால் காலை ரயில் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. நீண்டதூர ரயில்கள் எதுவும் கொழும்பில் இருந்து நேற்றுக்காலை சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. கொழும்பில் உள்ளூர் சேவைகள் மட்டுமே நடத்தப்பட்டதாம்.

அண்மையில் ரயில்வே ஊழியர்கள் சட்டப்படி வேலை செய்தபோது இந்த இயக்கத்தில் சேராத கார்ட் ஒருவரைத் தாக்கியதாகக் குற்றம்சாட்டப்பட்ட வேறு இரு கார்ட்மார்கள் நேற்றுமுன்தினம் தற்காலிகமாக வேலை

[8ம் பக்கம் பார்க்க]

# வேட்பாளர் புகார் செய்தால் உடன் பொலிஸ் நடவடிக்கை

## அமைதியான பிரசாரத்துக்கு ஒத்துழைப்பு: பொலிஸ் அதிபர் மாநாடு

யாழ்ப்பாணம், சனி

**சகல வேட்பாளர்களும் தங்கள் தொகுதியில் சுதந்திரமாகச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு பொலிசார் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள். எந்த அபேட்சகரும் தனிப்பட்ட முறையில் தேர்தல் தொடர்பான ஏதாவது முறைப்பாடு செய்தால், பொலிசார் உடன்நடவடிக்கை எடுப்பார்கள்.**

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை நடத்தி தேர்தல் தொடர்பான மாநாட்டின் போது பொலிஸ்அதிபர் திரு. ஏ. எஸ். செனிவரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் அதிபர் கூட்டிய இம்மாநாட்டில் சகல அபேட்சகர்களும் உதவிப் பொலிஸ் அதிபர்களான திரு. என். ரி. சில்வா ஜனப், நூர்டீன், இன்ஸ்பெக்டர் கே. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நல்லூர் தொகுதியில் தமது கூட்டங்களை சிலர் குழப்ப விருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக நல்லூரில் சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. சி. அருளம்பலம் பொலிஸ் அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

தேர்தல் பிரசாரங்கள் அமைதியானமுறையில் நடைபெற வேண்டுமென்றும்கூச்சல் குழப்பங்கள் இடம்பெறுவது நல்லதல்லவென்றும் பொலிஸ் அதிபர் ஆலோசனை கூறினார்.

மதில்களிலும் சுவர்களிலும் தேர்தல் சின்னங்கள் மட்டுமன்றி அபேட்சகர்களைத் தாக்கியும் எழுதப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படாது.

மதில்களிலும், சுவர்களிலும் தேர்தல் சின்னங்கள் மட்டுமன்றி, தேர்தல் தொடர்பான வாசகங்கள் எதுவும் எழுதாமல் தங்கள் ஆதரவாளர்களுக்கு ஒவ்வொரு வேட்பாளர்களும், ஆலோசனை கூறவேண்டுமென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிடும் இந்திய-இலங்கை இணைப்பு இயக்கத் தலைவர் திரு. அம்பலவாணர், ''அபேட்சகர்களுக்கு மாறாக ஏதாவது சுவர்களில் எழுதப்பட்டிருந்தால் பொலிஸார் அதனை அழிப்பார்களா?'' என்று கேட்டபோது அப்படியான கடமைகளில் பொலிஸார் ஈடுபடமாட்டார்கள் என்று பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

### நல்லூர் கிராமிய வங்கிக் கொள்ளை:

## கைரேகை நிபுணர்கள் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் கிராமிய வங்கியில் நடந்த கொள்ளை தொடர்பாக பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர். இதுவரை மற்றும் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை.

கொழும்பிலிருந்து வந்த கைரேகைநிபுணர்கள்,நேற்றுக் காலை, வங்கியிலும், சந்தேக

[8ம் பக்கம் பார்க்க]

கலைவிழாவில் நடன நிகழ்ச்சி



திருமதி கல்யாணி சுந்தரலிங்கத்தின் பாதநாட்டிய நிகழ்ச்சி, புங்குடுதீவு கலைவிழாவில் 26-ம் திகதி ஞாயிறு மாலை நடைபெறுகிறது. ஈழத்து முன்னணி நடன ஆசிரியை திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தத்திடம் முறையாகப் பரதம் பயின்று, அரங்கேறி, பின்னர் சென்னை சென்று பத்மஸ்ரீ வழுவூர் ராமையாபிள்ளையிடம் பரதக்கலை பயின்று திரும்பிய இவர், இலங்கை பல்கலைக்கழகச்சிறப்புப்பட்டதாரியுமாவார்.

வல்லிபுர ஆழ்வார் சுவாமி தேவஸ்தானம்

மகாகும்பாபிஷேகம் நிகழ்ச்சிநிரல்

27-6-77 தொடக்கம் கிரியைகள் ஆரம்பமாகி
1-7-77 வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்.
2-7-77 காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை எண்ணெய்சாத்தல்
3-7-77 காலை 9 மணி தொடக்கம் 10 மணிக்குள் மகாகும்பாபிஷேகம்
மாலை விசேஷ கலை நிகழ்ச்சிகளுடன் சுவாமி விதிவலம் வந்தருள்வார்.

6536 தர்மகர்த்தா சபையினர்.

## மின்சாரசபைவேலைநிறுத்தம் தொடருகிறது

### ஊழியர் லீவுகள் ரத்து

(கொழும்பு)
இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் இரண்டாவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

இதே வேளையில் மின்சார சபையின் சகல ஊழியர்களினதும் லீவுகளும் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

லீவில் நிற்கும் ஊழியர்களை உடன்வேலைக்குத் திரும்புமாறு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றபோதிலும் 17 தொழிற்சங்கங்களைக் கொண்ட இலங்கை மின்சார சபை ஊழியர் கூட்டுத் தொழிற் சங்க சம்மேளனம் இவ்வேலை நிறுத்தத்தில் தமது ஊழியர்கள் ஈடுபடவில்லை என அறிவித்துள்ளது

தவறான பிரச்சாரங்களுக்கு செவிசாய்த்து வழிதவறி நடக்க வேண்டாம்என்றும் தமது ஊழியர்களை இச்சம்மேளனம் கேட்டுள்ளது. (ஹ)

## குருநகரில் ஒருவர் வாள்வெட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், சனி
48 வயதுடைய ஒருவர் வாளால் வெட்டியும் கற்களால் குத்தியும் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று குருநகர் பொலிஸ் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

[8ம் பக்கம் பார்க்க]

# "ஐந்தாண்டுத் திட்டம் மூலம் பொருளாதார அபிவிருத்தி"

### — யோகேந்திரா துரைசுவாமி

அனலைதீவு, வெள்ளி

"நம்மை நாம் பலப்படுத்துவதற்கு அரசியல், பொருளாதார சமுதாய நிலைமைகளில் நாம் கவனம் செலுத்தவேண்டும். இவற்றைநாம் அடைந்தோமானால் சுதந்திர சுபீட்சமான வாழ்வினை நாம் அமைக்கலாம்" என்று தமிழ் மக்கள் இயக்க தலைவரும், ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி அனலைதீவு கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"தமிழ்மக்கள் இயக்கம் ஐந்து ஆண்டுத் திட்டத்தினையும் தனது கொள்கைகளில் ஒன்றாக வகுத்துள்ளது. ஊர்காவற்றுறை தொகுதி அபிவிருத்திக்கு இத்திட்டத்தைப் பயன்படுத்த நான் முன்வருவேன். இத்திட்டத்தின் மூலம் பலகைத் தொழில் நிறுவனங்களை உருவாக்கமுடியும். நமது தொழில் அதிபர்களும் வர்த்தகர்களும் தங்கள் சேமிப்புகளை தமிழ்ப் பகுதிகளில் இலாபகரமான உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்ய ஊக்கப்படுத்தப்படுவர். நாம் இவ்வாறு கைத்தொழில் நிறுவனங்களை உருவாக்கினால், இன்று வேலையற்றிருக்கும் இளம் தலைமுறையினரில் அநேகர் வேலைவாய்ப்புப்பெறக் கூடியதாக இருக்கும் எங்கள் தொகுதியில் கைத்தொழில் நிறுவனங்களை உருவாக்க, தேவையான 'மூலப்பொருட்கள்பற்றி ஆராய்ச்சிசெய்து, அவைபெறக்கூடிய இடங்களில் கைத்தொழில் நிறுவனங்களை ஸ்தாபிக்கலாம். பாரதத்தில் மகாத்மாகாந்தி எவ்வாறு சமுதாய ஒருமைப்பாட்டுக்காகப் பாடுபட்டு வெற்றிகண்டாரோ அவ்விதம் நாமும் சமுதாய ஒருமைப்பாட்டுக்காக உழைப்போம். ஒருமைப்பாட்டினையும் நமது மக்கள் மத்தியில் உண்டாக்கினால் தமிழினம் முன்னேறுவது நிச்சயம்" என்று கூறினார்.

இக்கருத்தரங்கிற்கு ஓய்வு பெற்ற புகையிரதநிலைய அதிபர் திரு. வீ. சாம்பசிவம் தலைமை வகித்தார்.

## இன்று

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப கல்வி நிறுவன தினம் இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

டாக்டர் ஏ. வி. ஏ. வேதநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்வைபவத்தில், தொழில்நுட்ப கல்வி நிறுவனம், இரண்டாவது தடவையாக டிப்ளோமாவையும், அத்தாட்சிப்பத்திரங்களையும் வழங்கும்.

## சங்காபிஷேக தொகுப்பு

யாழ்ப்பாணம், சனி

நாணுட்டான் செல்வமுத்துமாரி அம்மன் சங்காபிஷேக தொகுப்பு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தினால் இன்றிரவு 7 மணிமுதல் 7-30மணி வரை ஒலிபரப்பாகும்.

# "நமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல்"

சங்கானை, வெள்ளி

"கடந்ததேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினராகப் இப்பகுதிமக்களால் தெரிவு செய்யப்பட்டதிரு தியாகராசாவை ஆதரித்து இப்பகுதியில் பிரசாரம் செய்தவனில் நானும் ஒருவன் அவர்மேல் எமது தமிழ் காங்கிரஸ்கட்சி வைத்த திடநம்பிக்கையை தேர்தலில் வெற்றியீட்டியபின் ஒருதொகுதியில் சிதறடித்து விட்டது. இந்த உண்மையை மக்கள் இச்சந்தர்ப்பத்தில் அறிய வேண்டும் என்பதற்காகவே கூறுகின்றேன்."

இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரும் நல்லூர்த் தொகுதி வேட்பாளருமான திரு. மு. சிவசிதம்பரம் வட்டுக்கோட்டை மாவடிச்சந்திக்கருகாமையில் தந்தைசெல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார். திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. மு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

"சட்டநிர்ணய சபையில் புதிய அரசியல் அமைப்பிற்கு திருத்தப் பிரேரணை கொண்டு வரும்படி நான் திரு. தியாகராசாவைக்கேட்டேன். அதற்கு அவர்தான் ஒத்துழைப்பதாக எமக்கு வாக்குறுதி அளித்து விட்டு மறுதினமே டாக்டர். கொல்வின் ஆர். டி. சில்வா ஏதோ சொல்ல அப்படியே மௌனியாக இருந்துவிட்டு ஸ்ரீ லங்கா சு. கட்சியுடன் சேர்ந்துவிட்டார். அல்லாமலும் அடிமைச்சாசனமான அரசியல் சட்டத்திலும் கைச்சாத்திட்டு விட்டார். இதனை வட்டுத்தொகுதி மக்கள் மட்டுமல்லாமல், தமிழ் பேசும் இனம் என்றும் மறக்க முடியாது. எமது எதிர்கால சந்ததியினரின் சுபீட்சம் மக்கள் கையிலேயே தங்கியுள்ளதென்பதை சிந்தித்து தமிழ்மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சர்வஜென வாக்கெடுப்பு இத் தேர்தல் என்பதை எண்ணி செயற்பட வேண்டும்.

## கைது

கொழும்பு, வெள்ளி

லஞ்சத் தடுப்பு பொலிசார் 175 ரூபா லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நெற்சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் மிருந்தலைப் பிரிவைச்சேர்ந்த ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

# ஜே. ஆருடனும், சிறிமாவுடனும் பேசியதை வெளியிடாததேன்?

### சுயாட்சிக்கழக உப-செயலாளர் கேள்வி

வண்ணார்பண்ணை, வெள்

"தமிழர் கூட்டணித் தலைவர்கள் இறுதிக்காலத்தில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் பேசியது என்ன? கூட்டணித் தலைவர் திரு. தொண்டமான் வீட்டில் ஐக்கியதேசியக்கட்சி தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இரகசியமாக பேசியது என்ன? இக்கேள்விகளுக்குத்தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்கள் பதிலளிக்க வேண்டும்." என்று ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு சிவன் கோவிலடியில் நடந்த தமிழர் சுயாட்சிக் கழகத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் சுயாட்சிக்கழகத்தின் துணைச் செயலாளர் சட்டத்தரணி திரு. ந. ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

திரு. ஆறுமுகசாமி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஸ்ரீகாந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"வட்டுக்கோட்டைத் தனிநாட்டுத் தீர்மானத்தை விட வேறு எதையும் நாம் எந்த ஆட்சியினருடனும் பேச மாட்டோம் என்று கூறியவர்கள் பிரதமர் ஸ்ரீமாவுடனும், ஜே ஆருடனும் என்ன பேசினார்கள்? இதையிட்டு தமிழ் மக்களுக்கு இன்னமும் தெளிவாக இத்தலைவர்கள் கூறாததன் காரணம் என்ன? தமிழினம் கூட்டணியின் திட்டமில்லாத தேர்தல் போராட்டங்களுக்கு இனி மேலும் பலியாகக் கூடாது.

தமிழர் சுயாட்சிக்கழக பொதுச் செயலாளர் திரு. செல்லையா கோடீஸ்வரன் பேசுகையில், கூறியதாவது அமரர் வன்னியசிங்கம், இராசவரோதயம் போன்றவர்கள் கிழக்கு மாகாணத்தின் மீது வைத்திருந்த பற்று பாசம் இன்றுள்ள கூட்டணித் தலைவர்களுக்குக் கிடையாது. இதனாலேயே கிழக்கு மாகாணத்தைப் படிப்படியாகப் பறிகொடுத்தனர். கிழக்கு மாகாணத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் இதுவரை குரல்கொடுத்து வந்த ஒரு இயக்கம் தமிழர்சுயாட்சிக் கழகமேயாகும்.

இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் தொகுதி இன்று ஒற்றைத் தொகுதியாக்கப் பட்டுள்ளது. இதற்குப்பதிலாக சேருவலை சிங்களத் தொகுதியொன்றை பிருக்கத் தமது சம்மதத்தை தெரிவித்தவர்கள் இந்தகூட்டணியினர். இத்திட்டத்தை எதிர்த்த ஒரே ஒரு தமிழ்க் கட்சி தமிழர் சுயாட்சிக் கழகம் ஒன்றுதான்." (க)

# "தமிழர் உரிமை வழங்கும் அரசுடன் சேருவேன்"

### சி. எக்ஸ். மாட்டின்

யாழ்ப்பாணம், சனி

"நான் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கும் கடிதம் எழுதியுள்ளேன். அவர்களில் யார் தமிழர் உரிமைகளை வழங்குகின்றார்களோ அவர்களோடு சேருவேன்".

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு.சி. எக்ஸ். மாட்டின் இராஜேந்திராவீதியில் திரு செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார். திரு. சி.எக்ஸ். மாட்டின் மேலும் கூறியதாவது:-

"நான் எம்.பியாக இருந்த காலத்தில் நான்குதடவை எனக்கு அரசாங்கக்கட்சியிலிருந்து அழைப்பு வந்தது. அந்த வேளையில் தமிழரசுக் கட்சியினால் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றவன் என்றமுறையில் அரசுடன் சேராமல் தமிழரசுக் கட்சியுடனும் சேராமல் தனித்து நின்று போராடினேன்.

"எம். பி. ஆகிவிட்டால் இலகுவாக மக்களுடைய பிரச்னையைத்தீர்க்க முடியாது. நான் பலகஷ்டங்களுக்குமத்தியில் மக்களுக்குச் சேவையாற்றினேன். ஆரிய சிங்கள இனத்தினர் தமிழரை அடக்கியாள்வது மெய். அதற்காகவும் நான் போராடினேன. இன்று தமிழன் உலகமெல்லாம் சென்று சிறப்படையக் கூடிய நிலையில் உள்ளான் என்றால் அது அவனது கல்வித்திறத்தினால் ஆகும்".

திரு. எம். எஸ். பேரின்பநாயகம் பேசுகையில் கூறியவதாவது:- நான் சார்ந்திருக்கும் கட்சியின் அரசாங்கத்தை ஆதரித்தவன் என்ற முறையில் அமரர் துரையப்பாவின் மறைவுக்குப் பின்னர் நான் திரு மாட்டினை ஆதரிக்க முன்வந்துள்ளேன். திருமதி துரையப்பா எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் துரையப்பாவின் பெயருக்கு மாசில்லாமல் நடந்து கொள்ளும்படி குறிப்பிட்டுள்ளாரே தவிர எவரையும் ஆதரிக்கமோ ஆதரிக்ககாமல் விடவோ கூறவில்லை என்றார்.

திருவாளர்கள்: எம். பாவிலுப்பிள்ளை, எம். பிரான்சிஸ், எஸ். சத்தியசீலன் ஆகியோரும் உரையாற்றினர். (உ)

# 'தனிநாடு கோரிக்கையை இறுதிவரை எதிர்ப்போம்'

### சமசமாஜக்கட்சி வேட்பாளர்

யாழ்ப்பாணம், சனி

"தனிநாடு வந்தால் 25வருடங்களுக்கு முன்பிருந்த நிலைக்கு நாம்தள்ளப்படுவோம் எம்மைப் பற்றி தட்டிக் கேட்க ஆளில்லாத அநாதைகளாவோம். சிறுபான்மைத் தமிழர்களாகிய நாங்கள் தனிநாட்டுக் கோரிக்கையை இறுதி மூச்சு வரை எதிர்க்க வேண்டும்"

நீர்வேலி ஸ்ரீ பரமேஸ்வரி சனசமூக நிலையத்தில் நடந்த கருத்தரங்கில் பேசிய கோப்பாய்த் தொகுதி சமசமாஜக் கட்சி வேட்பாளர் திரு.வ. நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கு. அருணாசலம் தலைமையில் சமசமாஜக்கட்சி வேட்பாளர் திரு.வ. நடராசாவை ஆதரித்து இக்கருத்தரங்கு நடந்தது. வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் சங்கத் தலைவர் திரு.க. தவஞானம் கூறியதாவது:-

"இந்நாட்டில் ஒரு சமதர்ம ஆட்சி ஏற்பட்டால், எமது பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்க்கலாமே அல்லாமல்" கூட்டணியினர் கூறுவது போல தனிநாடு கோருவதன் மூலம் எமது பிரச்னையைத் தீர்க்க முடியாது.

உரும்பராய் வடக்கு நவசக்தி சனசமூகநிலையத் தலைவர் திரு.எஸ். அப்புத்துரை, திரு.க. ராமலிங்கம் ஆகியோரும் பேசினார்கள். (க)

# '5 தொழிற்சாலைகளை கிளிநொச்சியில் நிறுவுவேன்'

### யூ. என். பி. வேட்பாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, வெள்ளி

"கிளிநொச்சி எம். பியாக நான் தெரிவுசெய்யப்பட்டால் இப்பகுதியில் 5 தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கை எடுப்பேன்".

பூநகரியில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி ஐ. தே. க. வேட்பாளர் திரு. வி. கனகசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கனகசூரியர் மேலும் கூறியதாவது:

கிளிநொச்சித் தொகுதியில் இம்முறை முதன்முதலாக ஐக்கியதேசியக்கட்சி தேர்தலில் நிற்கிறது. ஒரு தேசியக்கட்சி மூலம்தான் தமிழர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும். கிளிநொச்சித் தொகுதியில் நான் தெரிவுசெய்யப்பட்டால் 5க்கு மேற்பட்ட தொழிற்சங் ஙகளை பளை, பூநகரி, கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி, அக்கராயன்குளம் ஆகிய பகுதிகளில் நிறுவ நடவடிக்கை எடுப்பேன்.

"நான் வெற்றிபெறும் பட்சத்தில் பூநகரி கடலில் மகாதேவா பாலத்தையும், கிளிநொச்சிப்பகுதியில் குழாய்க்கிணறுகள் பலநிறுவி விவசாயச்செய்கை விருத்திசெய்து பொருளாதாரப்பாடு புரட்சி ஒன்றை உருவாக்கப்படுவேன். மற்றும் கிளிநொச்சிப் பிரதேசத்தை வளம்படுத்துவதுடன் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக அரசுடன் பேசி ஆவன நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வேன்".

மற்றும் கே. தவராசா, சிற்றம்பலம், நாயகம், பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். (க)

# பெண் கடத்தல்:

## வாலிபர் தலைமறைவு

மொனருகல, வெள்ளி

மொனருகலையில் நடைபெற்ற பெண் கடத்தல் சம்பவம் ஒன்று தொடர்பாக உபாலி [வயது 26] என்ற வாலிபரை மொனருகல பொலிசார் தேடிவருகின்றனர்.

இவர் கருணாவதி [14 வயது] என்ற யுவதியையே கடத்திச் சென்றுள்ளாராம்.

கடத்திச் செல்லப்பட்ட பிரஸ்தாப யுவதி பற்றிய அடையாளத்தில் அவர் நீண்ட கருள் கேசம் கொண்டவர் என தெரிவிக்கப்படுகிறது. [உ]

# கிளிநொச்சிக்கு ஜூலை 2-ல் பிரதமர் விஜயம் செய்வார்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சித் தொகுதிக்குப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜூலை 2-ம் திகதி விஜயம் செய்கின்றார்.

கிளிநொச்சித் தொகுதியில், சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரை ஆதரித்து பிரதமர் அன்று உரை நிகழ்த்துவார்.

கிளிநொச்சி பட்டின சபை நிர்வாகத்தினால் அமைக்கப்பட்டுள்ள புதிய நகரமண்டபத்தை பிரதமர் திறந்துவைப்பார்.

இதைத் தொடர்ந்து, கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில், பிரதமர் உரை நிகழ்த்துவார்.

இக்கூட்டத்தில் வடபகுதிச் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள். (க)

# பாக் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து இழுபறிநிலை!

இஸ்லாமாபாத். ஜூன் 24 பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கும் இடையிலான கருத்துவேறுபாடுகள் இன்னமும் தீரவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளுக்கான தமது 5 நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் பூட்டோ நேற்று நாடு திரும்பினர்

நாடு திரும்பியதும் அவர் எதிர்க்கட்சி கூட்டணித் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும் கருத்துவேறுபாடுகள் தீரவில்லை என ராவல்பிண்டி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் இன்னமும் சில நாட்களில் இக்கருத்துவேறுபாடுகள் தீர்க்கப்பட்டு சமரச உடன்படிக்கை கைச்சாத்தாகும் என்று எதிர்க்கட்சிக் கூட்டணி நம்பிக்கை தெரிவித்துள்ளது. (உ)

## "எகிப்து — ரஷ்ய பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றமில்லை"

### எகிப்து அறிவிப்பு

கெய்ரோ, ஜூன், 24 சோவியத் யூனியனுக்கும், எகிப்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்று எகிப்திய வெளிநாட்டமைச்சர் ஜனாப் பஹ்மி கூறியுள்ளார்.

மாஸ்கோவில் நடத்திய பேச்சுவார்த்தையின் பின் கெய்ரோவில் தாம் வெளியிட்ட உத்தியோக பூர்வமான அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வருடம் சோவியத் ஜனதிபதி திரு. பிரஷ்னேவ் எகிப்துக்கு விஜயம் செய்வது நிச்சயமா என்பதனை இந்நிலையம் கூறமுடியாத நிலையிலிருக்கிறது என்றும்கெய்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## குற்றால சாரல்

சென்னை, ஜூன் 24 குற்றாலத்தில் இம்மாதம் சாரல்விழா நடைபெறவுள்ளது.

குற்றால சாரல் ஆரம்பமாகியுள்ளதை அடுத்து இங்கு உலகின்பலபாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

இம்மாதம் 24-ந் திகதி முதல் அடுத்த மாதம் 2-ந் திகதி வரைசாரல் விழா நடைபெறவுள்ளது. (இ)

## "தமிழ்த்தாகம் தீர்க்கும் ஜீவநதியாக தி.மு.க. காலமெல்லாம் நிலைத்திருக்கும்"

### பேராசிரியர் அன்பழகன் முழக்கம்

சென்னை, ஜூன் 24 "தமிழ்மொழியின் பாதுகாப்புக் களஞ்சியமாக தி. மு. க. என்றும் வற்ருமல் ஓடிக்கொண்டிருக்கும் ஜீவநதியைப் போன்றது" என்று தியாகராஜ நகரில் தி. மு. க. வெற்றிக்கு நன்றி தெரிவித்துப்பேசும்போது பேராசிரியர் திரு. க. அன்பழகன் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "கழகம் பெற்ற வெற்றி, தமிழகத்தின் வரலாறு இருண்டுபோகவில்லை யென்பதை காட்டுகிறது.

மனிதன் இன்றிருக்கலாம் நாளை சாகலாம். ஆனுல் நதி என்றும் சாவதில்லை. அது என்றும் ஓடிக்கொண்டிருக்கும். சில வேளைகளில் ஆற்றில் நீர் குறையலாம். கண்ணுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனுல் அதிலிருக்கின்ற ஊற்று என்றும் தாகத்தைத் தீர்க்கும். நீராகவே இருக்கும் அதைப்போல தி. மு. க.வும் இவ்வாறு தாகம் தீர்க்கும் நீரைப்போல தமிழ்த் தாகம் போக்கும் ஆருகப் பயன்படும்.

"எமது கழகத்தில் ஆற்றல்மிக்கவர் சிலர் பிரிந்தாலும் நமது கழகத்தின் கொள்கைகள் மாசுபடவில்லை. போனவர்கள் போனவர்கள்தான். அதை நினைத்து வருந்தவில்லை. இருப்பவர்களே அதைப் பொறுப்போம்" என்றார். (கெ-உ)

## இந்திய ஜனதிபதி தேர்தல்:

## ஏகமனதான தெரிவுக்கு பிரதமர், சவான் விருப்பம்

புதுடில்லி, ஜூன் 24 பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. பி. சவானும் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின்போது குடியரசுத் தலைவர் தெரிவை ஏகமனதாக நடத்துவது சிறப்பானது என்று விருப்பம் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஜனதிபதி பதவிக்கு திரு. சஞ்சீவரெட்டி, திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன என்பது தெரிந்ததே. (கெ-உ)

## ஷேக் அப்துல்லா மீது ஊழல் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன், 24 காஷ்மீர் சிங்கம் ஜனுப் ஷேக் அப்துல்லாமீது ஊழல் குற்றச்சாட்டொன்றை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண் சிங்கிடம் முன்னுள் அமைச்சர் ஜனுப் ஏ. எம். தாரிக் கையளித்து இதை விசாரிக்கும்படி கோரியுள்ளார்.

ஜனுப். ஷேக் அப்துல்லா, ஏராளமான சொத்துசேர்த்திருப்பதாகவும், "நகுல்" நிலத்தை அபகரித்திருப்பதாகவும், பெரும் தொகை வருமானவரி செலுத்தவில்லையெனவும் ஹொட்டல் ஒன்றை புதுப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியின்றி ஏழரைலட்சம் ரூபா வழங்கியதாகவும் இவர் குற்றச்சாட்டில் கூறியுள்ளார்.

இக்கோரிக்கை பற்றி தாம் நடவடிக்கை எடுப்பதாக உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளனர். குற்றச்சாட்டைக் கொடுத்த ஜனுப் தாரிக் சட்டசபைத் தேர்தலில், ஜனுப் ஷேக் அப்துல்லாவை எதிர்த்துப் போட்டியிடுகிறார். (கெ-உ)

## மத்திய கிழக்குப் பிரச்னை:

## "பகிரங்கப் பேச்சுவார்த்தை அவசியம்" — இஸ்ரேல் பிரதமர்

டெல்அவில், ஜூன், 24 1967-ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த எல்லைக்குநாம் திரும்புவது என்பது சாத்தியமில்லை என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் திரு. பெகின் யூதத் தலைவர்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

மத்தியகிழக்குப் பிரச்னை தீர்வதற்கு பகிரங்கப் பேச்சுவார்த்தைகள் அவசியமானவை என்றும் பிரதமர் வலியுறுத்தினார் (உ)

## அதிபர் இடி அமின்

கம்பாலா, ஜூன் 24 உகண்டா ஜனதிபதி இடி அமின் எவ்வித உயிராபத்தும் இன்றி ஆரோக்கியமாக இருக்கிறார் என்று உகண்டா உப ஜனதிபதி அட்ரஸி அறிவித்துள்ளார்.

எகிப்திய ஜனதிபதி அன்வர் சதாத்தின் செய்தி ஒன்றினைக் கொண்டு வந்த நிதியமைச்சர் பிரிகேடியரை இடிஅமின் வரவேற்றார் என்றும் உப ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

இதே வேளை இடி அமின் கொலை செய்யப்பட்டுவிட்டார் அல்லது காணுமல் போய்விட்டார் என்று பரவிய செய்திகள் குறித்து இராணுவ அதிகாரி • ஒருவர் உகண்டா வானெலி மூலம் கண்டனம் தெரிவித்திருக்கிறார். (உ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி இம் மாதம்26-ம் திகதி ஆயுர்வேதத் திணைக்களம் நடத்தவிருந்த இரண்டாவது சித்த ஆயுர்வேத வைத்தியக் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (கா)

## "கல்லூரிக்குப் பெருமை தருவது மாணவர்களின் நல்லொழுக்கமே"

நீர்வேலி, வெள்ளி "பழம் பெருமைவாய்ந்த கல்லூரிகளின் பழைய மாணவர்களே பாரம் பரியங்களைக் கட்டிவளர்க்கின்றனர். நாட்டின் தலைவர்களாகவும் இவர்களே விளங்குகின்றனர்" என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல் விஜயபாலாகோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 125-ம் ஆண்டு நினைவு மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. சி. சிவநேசன் இவ்விழாவிற்குத் தலைமைவகித்தார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்திரு.கே. மாணிக்கவாசகர் பேசுகையில் "கல்லூரியின் பெயரை வளர்ப்பன கட்டிடங்கள் அல்ல அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் முயற்சியும் நல்லொழுக்கமுமே யாகும்" என்றார். வட்டாரக் கல்வியதிகாரி. திரு. வி.கே. ஈசுரபாதம் பேசுகையில் "இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அன்று உதவிய பெரியார்களின் சேவை பாராட்டப்பட வேண்டியது" என்றார்.

மேற்படி கல்லூரி பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. கே. கனகலிங்கம் கல்லூரி வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகள் பற்றிய மகஜர் ஒன்றினை அரசாங்க அதிபரிடம் கையளித்தார்.

திருவாளர்கள் வி,ஆளர்தம், கே. இராசரத்தினம் ஆகியோரும்பேசினர்.

மாணவிகளின் நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. (உ)

## "தேர்தலின்பின் இந்நாட்டை இளைஞர்களே ஆட்சி செய்வார்கள்" — வவுனியாவில் ஜே. ஆர்.

வவுனியா, வெள்ளி "எதிர்வரும் பொதுத் தேர்தலின்பின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இளைஞர்களே இந்த நாட்டில் நிரந்தர ஆட்சி ஒன்றை அமைக்கப்போகிறார்கள் என்பது திண்ணம். ஆகவேதான் ஐ. தே. க. வேட்பாளர்களில் 123 பேரை நாம் இளைஞர்களாகத் தெரிவு செய்துள்ளோம்."

இவ்வாறு ஐ. தே. க. தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வவுனியாவில் பேசுகையில் கூறினர்.

வவுனியாவில் ஐ. தே. க. சார்பில் போட்டியிடும் திரு. புலேந்திரனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது:-

"நாட்டில் பசியும், பட்டினியும் இன்று தாண்டவமாடுகின்றது. ஐ. தே. கட்சி பதவிக்கு வந்தவுடன் நாட்டு மக்களுக்கு போதிய உணவும், உடையும் தருவோமென நான் உறுதியளிக்கின்றேன். இன்று இங்கு தனது இரத்தத்தால் ஒரு வீர வாலிபர் திலகம் இட்டார். அவரின் இரத்தமும், எனது இரத்தமும், உங்கள் இரத்தமும் ஒன்றே. எனவே எனது ஆட்சி மக்களாட்சியாகவே இருக்கும்.எமது ஆட்சியில் ஒரு குடும்பம் பதவிக்குவர அனுமதிக்கமாட்டோம்.

"வவுனியாத் தொகுதியில் போட்டியிடும் திரு. புலேந்திரனை உங்கள் எம். பி. யாகத் தெரிவு செய்வதன்மூலம் நீங்கள் ஒரு சிங்கள-தமிழ் ஒற்றுமைக்கு வழிவகுக்கின்றீர்கள் என்பதை மறக்கக்கூடாது.

கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர்மூலம் வவுனியா வந்தடைந்த திரு. ஜே. ஆர். கூட்டம் முடிவடைந்தவுடன் மன்னார் பயணமானுர்.

இக்கூட்டத்தில் உரையாற்றியகாவலூர்த்தொகுதிஐ தே கட்சி வேட்பாளர் திரு. ம அமிர்தலிங்கம் தமது உரையில், அரசியல் அமைப்புடன் விளையாடவேண்டாமென திரு. அனுரா பண்டாரநாயக்காவுக்கு ஐ. தே க சார்பில் வேண்டுகோள் விடுத்தார்.

"ஐ.தே.கட்சி சலகம் வின்வித்தால் ஐந்து வருடங்களுக்கு தேர்தலை ஒத்திவைப்போம என அவர் பேசியுள்ளார். திரு. அனுராவின் அரசியல் முதிர்ச்சியின்மையைத்தான் இப்பேச்சு காட்டுகின்றது. இது அரசியல் அமைப்பையே அவமதிக்கும் வகையில்அமைந்துள்ளது" என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினர். (இ)

## விஷமத்தனம்

அம்பன், வெள்ளி பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட வீதிகளுக்கு புதிதாகப் போடப்பட்ட பெயர்ப் பலகைகளை விஷமிகள் இரவோடிரவாக சேதப்படுத்தி வருகின்றனராம். (உ)

## மனையியற் கூடம்

அம்பன், வெள்ளி பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் இந்த வருட இறுதிக்குள் சுமார் 16 ஆயிரம் ரூபா செலவில் புதிய மனையியற்கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக மேற்படி பாடசாலையின் அதிபர் வே. ந. பாலசுந்தரம் தெரிவித்துள்ளார் (உ)

## சுதந்திர தமிழீழம் அமைப்பதே லட்சியம்'

கிளிநொச்சி, வெள்ளி "மதசார்பற்ற சுதந்திர தமிழ் ஈழத்தை நிறுவி, அந்த நாட்டில் ஒரு சுயாட்சி அமைப்பில் தலை நிமிர்ந்து வாழ்வது ஒன்றே ஈழமக்கள் இலட்சியமாகும்" என்று முரசுமோட்டையில் தமிழர்விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய திரு. வீ. ஆனந்தசங்கரி கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், "கிழக்கு மாகாணங்களில் தமிழன் பூமி பறிபோய்க்கொண்டிருக்கிறது. எமது பிரதேசங்கள் காப்பாற்றப்படாவிட்டால், எமக்கென ஒரு நாடு இல்லாத நிலை உருவாகிவிடும். எமது மறைந்த மாபெரும் தலைவர்கள் காட்டிய வழியில் நின்று எமது இழந்த உரிமைகளை இறுதிவரை பெற்றே திருவோம்" என்றார். (க)

## அருளுரை

யாழ்ப்பாணம், சனி திவ்வியஜீவன சங்கத்தின் சுன்னுகம் கிளை ஆதரவில் நாளை மாலை மலேஷியாவிலிருந்து இங்குவருகை தந்துள்ள சுவாமி ஸ்ரீ பிரணவானந்த மகராஜ் அருளுரை நிகழ்த்தவிருக்கிறார். (கெ-உ)

**மணிவாக்கு**

எவனொருவன் யாருக்காவது அடிமையாவதை விரும்பவில்லையோ அவன் கடவுளுக்கு அடிமையாகவேண்டும்.
— காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# தமிழரின் விமோசனம்

தமிழ் மக்கள் விடுதலை பெற்று விமோசனம் அடைய வேண்டுமானால் சாதிப் பேய் ஒழிய வேண்டுமென்றும். அப்போது தான் தமிழர் நல்வாழ்வு வாழ முடியுமென்றும் கூறப்படுகிறது.

சாதி வேற்றுமையான பல கொடுமைகள் ஏற்பட்டு சமூகம் சீர் குலைவதைக் கண்டு பல பெரியார்கள் வருந்தி, சீர் திருத்தம் செய்ய பலபல முயற்சிகளைச் செய்து வந்துள்ளனர்.

"சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்– நீதிவழுவாநெறி முறையின் மேதினியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ள படி" என்றார் ஔவை பிராட்டியார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா– குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்பாவம்" என்று பாடியுள்ளார் அமரர் பாரதியார்.

"சாதி குலப் பிறப்பென்னும் சுழிப்பட்டுத்தடுமாறும் ஆதமிலி நாயேனை அல்லலறுத்து ஆண்டு கொண்டு" என்பது மணிவாசகம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே சாதியைப் பற்றி பல பெரியோர்கள் இப்படி கவிதைகள் மூலமும் உபதேச வாயிலாகவும் சொல்லி வந்தும் சாதிப் பேய்களின் ஆட்டம் குறையவில்லை அவை நீங்கிய பின் தான் தமிழருக்குவிமோசனமென்றால் தமிழருக்கு விடுதலை கிடைக்கும் காலத்தைப் பற்றி திகைப்பும் கவலையும் ஏற்படுவதாகவுள்ளது.

இந்துக்கள் மதம் மாறிவிட்டால் சாதிப்பேய் ஒழிந்துவிடுமென்று சிலர் கருதினர். ஆனால் மதம் மாறியும் இந்தப்பேய் ஒழியவில்லையே. புதியபுதிய உருவங்களில் சூரன் தலை மாறி மாறி முளைப்பது போலல்லவா இந்தக் கொடுமைகள் தலைதூக்குகின்றன. மதம் மாறியும் ஆபிரிக்காவில் கறுப்பு நிறத்தவனுக்கு எவ்வளவு கொடுமைகள்! சாதியற்றதென்று கூறப்படும் மதத்தவர்களுக்கிடையே மக்களுக்கு மக்கள் செய்யும் கொடுமைகள் நீங்கிவிட்டனவா?

இந்து சமயத்திலே சாதி அமைப்பு ஏற்பட்டதேன்? அது நீடித்திருக்கக் காரணமென்ன. தொழில்களின் அடிப்படையில் அக்காலத்தில் சாதிமுறை வகுக்கப்பட்டதால், மக்களிடையில் வேலையில்லாச் சங்கடங்கள் ஏற்படாததுடன் தொழில் வளர்ச்சிக்கும் இடமேற்பட்டது. சமூகமும் கட்டுப்பாட்டுடன் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. தொழிலுக்குத் தொழில் உயர்வு தாழ்வில்லை என்றும் எல்லாத் தொழில்களும் சமூகத்துக்கு முக்கிய தேவையென்றும், ஆகவே எல்லாச் சாதியினரும் சரிசம அந்தஸ்து உள்ளவர்களென்றும் கருதப்பட்டு வந்திருக்கவேண்டும்.

சரித்திர காரணங்களால் பின்னர் சாதி உயர்வு தாழ்வு எண்ணங்களும் கொடுமைகளும் ஏற்படவே, சாதிகளையே ஒழிக்கவேண்டுமென்ற கூக்குரல் எழுந்தது. தவறு, சாதி அமைப்பிலா? அல்லது மனிதருக்கு மனிதர் செய்யும் கொடுமையிலா? சாதியின் பெயரால் சமூகக் கொடுமைகள் நடைபெற முடியாமல் சட்ட மூலம் மட்டுமன்றி, மனிதரின் இரும்பு தருமனத்தை இறை அருளாலும் அன்பாலும் மாற்றச்செய்தால் சாதிகள் ஒழியவேண்டுமென்ற கூச்சல் அடங்குவதுடன் பல பல சாதிகளுமடங்கிய சமூகம் பரஸ்பரம் ஒற்றுமையாக ஒத்துழைத்து வாழ முடியும்.

பெரிய புராணம் பல பல சாதிகளைச் சேர்ந்த அடியார்களையும் போற்றியுள்ளது. ஒருவர் பிறப்பால் எந்தச் சாதியாயினும், அவர்கள் பக்தியினால், தெய்வத்துக்கு சமமாக உயர்ந்துவிடலாமென்று சைவசமயம் காட்டுகின்றது. ஆகவே தவறு சாதிமுறையிலா? அல்லது மனிதர் செய்யும் கொடுமையிலா? சாதிக்கொடுமைகளையும், சமூகச் சுரண்டல்களையும் பொருளாதார நடவடிக்கைகள் மூலமும் வேறு அன்புவழிகளிலும் முயற்சி எடுப்பின் தமிழ் சமூகம், காலவரையின்றி காத்திராமல் வெகுசீக்கிரத்தில்விமோசனமடைய வழிபிறக்குமல்லவா?

## "சுயேச்சைவாதிகளால் சேவை செய்யமுடியாது"

— வெ. யோகேஸ்வரன்

யாழ்ப்பாணம், சனி

"யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும், மற்றைய அனைவரும் சுயேச்சை வேட்பாளர்களே. ஒரு சுயேச்சை வாதி ஒரு இனத்திற்கு சேவையாற்ற முடியாது சுயநலம்தான் இருக்கும். இந்நிலையில் எம்இனத்திற்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையை உணர்ந்து விடுதலை இயக்கத்திற்கு வாக்களியுங்கள்"

நாவலர் வீதி புதுப்பள்ளிச் சந்தியில், கூட்டணிக் கிளை திறப்புவிழாவில் பேசிய யாழ். தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாப் எம். எஸ். சகாப்தீன் தலைமையில் நடந்த விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

"தேர்தலில் வெல்லலாம்; தோற்கலாம். ஆனால் தேர்தல் மூலம் அரியபண்புகள் நிறைந்த நண்பர்களையும் பெரியார்களையும் மறக்கமுடியாது. இன்று என்னோடு பழகும் ஆயிரமாயிரம் முஸ்லிம் நண்பர்களின் விருந்தோம்பலை என்றும் மறவேன். அவர்களுக்காக என் வாழ்நாள் பூராவும் விசுவாசமாக இருப்பேன்."

ஜனாப் வி. முத்துராசா, ஜனாப் ஏ. ஏ. எம். ஜலீல் ஆகியோரும் பேசினார்கள். (கெ)

## "யூ. என். பி. ஆட்சியில் இளைஞர் குறை தீரும்"

யாழ்ப்பாணம், சனி

"எமது கட்சி இளைஞர் நலனில் அக்கறைகொண்ட ஒரு ஜனநாயக சோஷலிச கட்சியாகும். நாம் பதவிக்கு வந்ததும் அரசு, இளைஞர் அரசாங்கமாகவே இயங்கும்."

நெடுந்தீவு நடுக்குறிச்சிக் கிளைத்திறப்பு விழாவில் பேசிய ஊர்காவற்றுறை யூ. என். பி வேட்பாளர் க. ம. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

நெடுந்தீவு கிராம சபை உறுப்பினர் திரு கதிர்வேலு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், "நாம் பதவிக்கு வந்தவுடன் எமது இளைஞர் கல்வி, வேலை வாய்ப்பு ஆகியன சவுன்சிலினூடாகவே திட்டமிடப்படும். இளைஞர்களை இந்நாட்டு மன்னர்களாக்குவதே எமது கட்சியின் நோக்கமாகும்" என்றார். (கு)

## "தமிழன்தலைநிமிர்ந்துவாழ தனிநாடு அவசியம்"

கோண்டாவில், வெள்ளி

"தமிழன் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்றால் அவனுக்கென்றோர் தனிநாடு வேண்டும். இந்தக் கொள்கையை ஈழத்தமிழன் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் ஆறுகோடி தமிழினமும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது"

இவ்வாறு கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சட்டத்தரணி எம். ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ஆட்சியாளர்களால் தமிழினத்தின்மீது அடக்குமுறை அதிகரிக்கப்படுகிறதென்றும் இதனால் புரட்சி வெடித்தே தீரும் என்றும் ஒரு சுதந்திர தமிழ் ஈழம் மலர்ந்தே தீரும் என்றும் கூறினார்.

திரு மு. சிவசிதம்பரம் உரையாற்றுகையில், "நாம் பெரும்பான்மையினத்திடம் உரிமைகேட்டுப் போராடுகிறோம். ஆனால் எமக்குள் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. அந்தநிலைமைமாற வேண்டும். அதனால்தான் உடுப்பிட்டித் தொகுதிக்கு ராஜலிங்கத்தை வேட்பாளராக நியமித்தோம்" என்றார்.

சட்டத்தரணி விஸ்வநாதன் அந்தனிசில் ஆகியோரும் பேசினார்கள் (க)

## இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கு திறப்புவிழாவையொட்டிய -வது நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன. இன்றைய நிகழ்ச்சிகளாக பாடசாலை மாணவர்களின் இசைநிகழ்ச்சிகளும் பட்டிமன்றத்தில் இன்றைய பிரச்னைக்கு விடிவு தருவது "முதியோர்போக்கா? இளைஞர் போக்கா" என்னும் தலைப்பு இடம்பெறுகிறது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர்களின் "மேலும் கீழும்" யாழ்வளாக இராமநாதன் கல்லூரி "வாத்தியப் பிருந்தம்" ஆகிய இசை நிகழ்ச்சிகள் முக்கியமாக இடம் பெறுகின்றன.

## "வேலையற்ற இளைஞருக்கு வேலைவாய்ப்பு அளிப்பேன்"

— வி. குமாரசுவாமி

சாவகச்சேரி, வெள்ளி

"நான் சாவகச்சேரி எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டால் வேலையற்ற வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து காணியற்றவர்களுக்கு காணிபெற்றுக் கொடுத்து பொருளாதாரத்தை முன்னேற்றுவேன்.

மீசாலை தெற்கில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. வி. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

மீசாலை கிராமமுன்னேற்றச் சங்கமண்டபத்தில் சாவகச்சேரி நகரசபை முன்னாள் தலைவர் திரு. க. கனகரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. வி. குமாரசுவாமி கூறியதாவது:-

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தங்களால் செய்ய இயலாதவற்றை உங்களுக்கு செய்து தருவோம் என்று சொல்லி இதுவரை ஏமாற்றி வந்தவர். அவர்கள் எதையும் உங்களுக்குச் செய்ததேயில்லை. ஆனால் என்னால் செய்ய இயன்றவற்றை செய்வேன்." திருவாளர்கள்: ஆ. தில்லைநாதன், என் பரமசிவம், ஆர். சந்திரன் ஆகியோரும் பேசினார்கள். (க)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

கல்வியங்காடு ஸ்ரீநடராஜர் முக்குறுணிப் பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை கீரிமலை பிரம்மஸ்ரீ. கு நகுலேஸ்வரக் குருக்களும், நீர்வேலி பிரம்மஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்களும், தலைமை தாங்கி நடத்தி வைப்பார்கள்.

இக்கோவில் ஒரு புராதன தலமாகும் இதே பெயர் கொண்ட விநாயகர்சிதம்பரத்தில் மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது (இ)

## "இளைஞர் சக்தியை ஒன்று திரட்டவே போராட்டம்"

யாழ்ப்பாணம், சனி

"பாராளுமன்ற ஆசனங்களுக்காக நாம் போராடவில்லை. எமது விடுதலையை ஒடுக்குவிக்கும் தலைவர்களை உள்ளும் புறமும் போராடவைப்பதற்குஇளைஞர் சக்தியை ஒன்று திரட்டுவதற்கே போராடுகின்றோம்"

ஊர்காவற்றுறை கூட்டணி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தைஆதரித்து நடந்த கூட்டத்தில் வண்ணை ஆனந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மண்டைதீவுஊராட்சிமன்ற உபதலைவர் திரு. செ. பேனுட் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வண்ணை ஆனந்தன் மேலும் பேசுகையில்,

"நாளை ஒரு பாரிய விடுதலை இயக்கம் தோன்றுமானால் அதன் பின்னே செல்லத்தயாராகவிருக்கின்றோம்" என்றார்.

உடுவில் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், "இனவிடுதலைக்கு போராடவந்திருப்பவர்கள் கடந்தகாலங்களில் எங்கிருந்தார்கள்? ஓர் இயக்கம் இனத்துக்காகப் போராடவேண்டுமானால் பல திட்டங்களுக்காக காலத்துக்குகாலம் போராடியிருக்க வேண்டும். இதைவிட, 4 வேட்பாளர்களுடன் ஓர் இயக்கம் போராட முடியுமா" என்று கேட்டார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், எனது தொகுதி மக்கள் இனவிடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும்போது, அவர்களை திசை திருப்புவதற்காக இன-ஒற்றுமையை குலைப்பதற்காக ஏதோ குறைகளைக்கூறினாலும் அவர்களை நிச்சயமாக அறம் கண்டிக்கும். இதை மக்கள் தேர்தலின்பின்னர் உணருவார்கள்" என்றார். (கெ)

**புத்தளம் சம்பவம்:**

## 'முதறிஞர்மட்டுமே குரல் எழுப்பினர்'

திருக்கேதீஸ்வரம், வெள்ளி

புத்தளத்தில் முஸ்லிம்களுக்கு நடந்த அக்கிரமத்தை பேரவையில் தட்டிக்கேட்ட ஒரேஒரு எம். பி அமரர் தந்தை செல்வா தான் அச்சமயம் மன்னார் ஐக்கியதேசியக் கட்சி எம். பியும் அங்கு இருந்தார் அவர் எதுவும் கூறவில்லை'

மன்னாரில் கூட்டணிவேட்பாளர் திரு. சூசைதாசனை ஆதரித்துநடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய புத்தளம் கூட்டணி வேட்பாளர் ஜனாப் டாக்டர் இல்யாஸ்மேற்கண்டவாறுகூறினார்

சட்டத்தரணி இ. ஆர். இ ஜெயராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் டாக்டர் இல்யாஸ் மேலும் பேசுகையில் புத்தளத்தில் நடந்த சம்பவம் மன்னாரில் நடக்காமலிருக்க வேண்டுமானால் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வாக்களிக்குமாறுகூறினார்

திருவாளர்கள்: ஏ அமிர்தலிங்கம், ரி சிவசிதம்பரம், டி. அந்தனிசில், ஈழவேந்தன், ம. சூசைநாயகம், எஸ் அ[illegible] தோனிப்பிள்ளை, கூட்டணி மன்னார் வேட்பாளர் திரு. சூசைதாசன் ஆகியோரும் பேசினார்கள். (க)

## சித்தன்கேணியில் பாற்பண்ணை

சுழிபுரம், வெள்ளி

சித்தன்கேணி இளம் கமக்காரர் சங்கத்தினர், சித்தன்கேணி கலட்டியில் அரசாங்க உதவியுடன் பாற்பண்ணை ஒன்றை இம்மாதக் கடைசியில் ஆரம்பிக்கவுள்ளனர். தொல்புரம் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. சிவபாதம், வலிகாமம்மேற்குஉதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணாசலம் ஆகியோரின் மேற்பார்வையில் இப் பாற்பண்ணை செயற்படவுள்ளது.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. வை. இராசசுந்தரத்திற்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பிரிவுபசாரவிழாநடைபெற்றது ஆசிரியர்கள், மாணவர்களால் நடாத்தப்பட்ட இவ்வைபவத்தில், திரு வை. இராசசுந்தரத்தின் சேவையைப் பலர் பாராட்டிப் பேசினர்.

## எம். பி.யாவது எப்படி?

# கட்டுப்பணம் கிடைக்க என்ன செய்யவேண்டும்?

**கட்டுப்பணம் கிடைக்குமா?**

கட்டுப்பணம் கிடைக்குமா? என்பது அச்சம் கலந்த கேள்வியேயானுலும் நியாயமான கேள்விதான. பணத்தைச் செலுத்தியபின்னர், நியமனத் தேதியன்று பதினெருமணிக்கு முன்னர் வேட்பாளர், தாம் போட்டியிடப்போவதில்லை என்று தம்கைப்பட எழுத்தில் அறிவித்தால், கட்டுப்பணமானது அதனைச் செலுத்தியவரிடம் திருப்பிக்கொடுக்கப்படும். நியமனத் தேதியன்று காலை பதினெருமணிக்குப் பின்னர் வேட்பாண்மையைக் கைவாங்க முடியாதாதலால், அவர் அதன் பின்னர் அந்தத் தேர்தலில் போட்டியிடாமல் விட்டாலும்கட்டுப்பணம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது ஆனுல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்தேர்தலுக்குமுன்பு இறந்தால், அவருடைய வேட்பாண்மை தொடர்பில் கட்டப்பட்ட பணம், அதை வேட்பாளர் செலுத்தியிருப்பின், அவருடைய வழியுரிமையாளரிடம் திருப்பிக் கொடுக்கப்படும், வேட்பாளருக்காக வேருெருவர் பணம் செலுத்தியிருப்பின் அதுஅவரிடம் திருப்பிக்கொடுக்கப்படும்.

**தேர்தலில் போட்டியிட்டவருக்குக் கட்டுப்பணம் கிடைக்கவேண்டுமானுல் அவர் என்ன செய்ய வேண்டும்?**

இரண்டு வழிகள் உள்ளன. ஒருவழி தேர்தலில் வெற்றி பெறுவது. தேர்தலில் வெற்றிபெற்ருல், பாராளுமன்றஉறுப்பினராக அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டவுடனும் அவருடையகட்டுப்பணம் அவரிடம் திருப்பிக்கொடுக்கப்படும்.

மற்றவழி "தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்றும், 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்றும் கூறுகின்றவழி. அதுதான் எட்டிலொரு வாக்குகளைப் பெறுகின்றவழி. இந்த எட்டிலொன்று என்ற விடயத்தைச் சற்றுவிளக்குதல் அவசியம். பருத்தித்துறைத் தொகுதியை உதாரணமாக எடுத்துக்கொள்வோம் அங்கே முப்பதினுயிரம பதிவுபெற்ற வாக்காளர்கள் இருக்கிருர்கள் என்று வைத்துக்கொள்வோம். அங்கே மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகிருர்கள். தேர்தலில் மூன்று வேட்பாளர்க்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 24 ஆயிரம் என்று வைத்துக்கொள்வோம். இருபத்திநாலாயிரத்தில் எட்டிலொன்று மூவாயிரம். ஆகவே மேற்படி உதாரணத்தின்படி பருத்தித்துறைத் தொகுதியில் வேட்பாளர் ஒருவர் (சோர்கின்ற வேட்பாளர் ஒருவர்) தமது கட்டுப்பணத்தையாகுதல் திருப்பிப் பெற வேண்டுமானுல், அவர் குறைந்தது மூவாயிரம் வாக்குகளையாகுதல் பெறுதல்வேண்டும்.

பருத்தித்துறைத் தேர்தற்ருெகுதி1உறுப்பினர்த் தொகுதி (one member constituency) என்பது எல்லோர்க்கும் தெரியும். அந்த அடிப்படையிலேயே மேலே கணக்குப்பார்த்தோம்.

உதாரணத்திற்கு, பருத்தித்துறை ஈருறுப்பினர்த் தொகுதி என்றும் (Two Member Constituency) அத்தொகுதிக்குரிய வாக்காளர்களின் எண்ணிக்கை முப்பதாயிரம் என்றும், தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் ஐம்பத்தாருயிரம் என்றும் வைத்துக்கொள்வோம் இந்த உதாரணத்தின்படி, வேட்பாளர் ஒருவர், தமது கட்டுப்பணத்தைத் திருப்பிப் பெறவேண்டுமானுல் எத்தனை வாக்குகளைப் பெற வேண்டும்? மொத்தத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் எட்டிலொன்றை தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர் எண்ணிக்கையாகிய இரண்டினுல் பிரிக்கவருகின்ற எண்ணிக்கைகொண்ட வாக்குகளை அவர் பெறுதல் வேண்டும்; அதாவது ஐம்பதாருயிரத்தை எட்டாற்பிரித்தால் ஏழாயிரம்: ஏழாயிரத்தை இரண்டாற் பிரித்தால் மூவாயிரத்து ஐந்நூறு; 56,000 1/8 X 1/2 = 3500); அதாவது மூவாயிரத்து ஐந்நூறு வாக்குகளையாகுதல் பெறுதல் வேண்டும்.

இவ்வாறு பெறத் தவறினுல் அவர் தமது கட்டுப்பணத்தை இழந்துவிடுவார். அப்பணம் அரசாங்கத்துக்கு உரியதாகிவிடும்.

—செ. சிறீக்கந்தராசா —
(சட்டத்தரணி)

வாக்காளர் முப்பதாயிரமாக இருக்க, ஐம்பத்தாருயிரம் வாக்குகள் எப்படி அளிக்கப்பட முடியும் என்றுமலைக்காதீர்கள். ஈருறுப்பினர்தொகுதியில் ஒரு வாக்காளருக்கு இரண்டு வாக்குகள் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள்.

**நியமனநாளும் நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பித்தலும்**

பாராளுமன்றம் (தேசிய அரசுப்பேரவை) கலைக்கப்படுவதாகக் கூறும் சனுதிபதியின் பிரகடனம, புதிய தேர்தலுக்கென நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான தேதியையும் குறிப்பிடுதல் வேண்டும் என்று அரசப் பேரவையின கட்டளையின் 27ம் பிரிவு கூறுகின்றது. நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கான தேதியானது, மேலே கூறப்பட்ட பிரகடனத் தேதியிலிருந்து 16 நாட்களுக்குக் குறையாததாகவும் 30 நாட்களுக்குக் கூடாததாகவும் இருத்தல் வேண்டும்,

1970ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சுதந்திரக்கட்சி அரசாங்கம், 1977ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி கலைக்கப்பட்டது என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம. புதிய தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைக் கோப்பிடுவதற்கென நியமிக்கப்பட்டதேதி 1977 யூன் 6ஆம் தேதி ஆகும். இத்தேதி பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தேதியாகிய 18-ம தேதியிலிருந்து 16 நாட்களுக்குக் குறையாத ஒரு தேதியாகும். வேண்டுமானுல் இந்தத் தேதியைச் சனுதிபதி பின் போட்டிருக்கலாம். ஆனுல் 1977 யூன் 17ஆம் தேதிக்குப் பின்வரும் ஒருதேதிக்குப் பின் போட்டிருக்கமுடியாது. ஏனென்ருல் பிரகடனத்தேதியிலிருந்து ஒருமாதகாலத்துக்குள் நியமனபத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பது சட்டம்.

தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியதும் தேர்தல் அலுவலர் ஒருசில ஆவணங்களை வேட்பாளருக்கு அல்லது கட்டுப்பணத்தைச் செலுத்துபவருக்கு வழங்குவார். நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கான இடத்துக்குச் செல்வதற்கான மோட்டார்வண்டி பாஸ்கள், வேறுசில அறிவுறுத்தல் நியமனப்பத்திரப்படிவங்கள் என்பன இவ்வாவணத்தில் அடங்கியிருக்கும்.

(தொடரும்)

## சட்டமும் சமுதாயமும்

## "எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல்"

உடுப்பிட்டி, வெள்ளி

"வேலைத்திட்டம்ஏதும் இல்லாமல் தேர்தலில் போட்டியிடுபவர்களை மக்கள் இனங்கண்டுகொண்டு விட்டார்கள். பலவேட்பாளர்கள், நாடாளுமன்றம்செல்வதைத்தவிரவேறு எந்தவிதமான வேலைத்திட்டமும் இன்றியே போட்டியிடுகின்றனர்".

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதியில் பன்னிரண்டு அம்ச வேலைத்திட்டத்தைத் தனது தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்துப் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் திரு. கே. ரி. இராசசிங்கம் புலோலி தெற்கு காந்தியூர் சனசமூகநிலையத்திற்கருகில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிலும், கருத்தரங்கிலும் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ். சண்முகம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. திரு. கே. ரி. இராசசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'இன்று பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் நானும், தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளருமே தேர்தல் விஞ்ஞாபனம், வேலைத்திட்டம், அடிப்படைக்கொள்கை ஆகியவற்றை முன்வைத்துப்போட்டியிடுகின்ருேம். தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ்ஈழஇலட்சியத்தை முன்வைத்துப் போட்டியிடுகின்றது. அதே நேரத்தில் நான் தமிழினம் பிரிந்துசெல்லும் தலைவிதியை நிர்ணயித்துப் போட்டியிடுகின்றேன். எனக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளரின் இலட்சியத்திற்கும் சமுத்திரம் அளவு வித்தியாசம் இருக்கின்றது. இத்தகைய உன்னதமான இலட்சியத்தை முன்வைத்துத தேர்தலில் போட்டியிடுவதோடு தொகுதியில் அபிவிருத்தி சம்பந்தமாகவும் உழைக்க முன்வரவேண்டும்.

'வாக்காளர்கள், இலட்சியங்களை மாத்திரம் தனிய ஆதரிக்கவில்லை. இவர்களது தொகுதி அபிவிருத்தி சம்பந்தமாகவும், தொகுதி மக்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்றவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்'.

## தேர்தல் பிரசாரம்

சுழிபுரம். வெள்ளி

வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு, வை. இராசசுந்தரம். காளுவனில் தமது இல்லத்திற்கு அருகாமையில் தேர்தல் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளார் எவ்வித துண்டுப் பிரசுரங்கள், ஒன்றும் இல்லாது தமக்கு வாக்குப் போடுமாறு சுழிபுரத்திலுள்ள வாக்காளர்கள் இல்லம்தோறும் சென்று வாக்குத்திரட்டி வருகின்ருர்.

## வேலர் குழு



வேலர்: கட்சி வேட்பாளரிலும் பார்க்க சுயேட்சை வேட்பாளரால்தான அரசாங்கத்திற்கு கூடிய நன்மை உண்டு.
மயிலர்: எப்படி?
வேலர்: சுயேட்சை வேட்பாளர் கட்டுக்காசு இழந்தால் அது அரசாங்கத்திற்கு டொனேஷன் ஆகும்.

— சுந்தர்

"த. வி. கூட்டணி

# கிளைகள் ஆற்ற வேண்டிய பணி என்ன?"

### நல்லூர் 'சிவா' கூறுகின்ருர்

கோண்டாவில், வெள்ளி

"த. வி. கூட்டணி கிளைகள் விடுதலை வீரர்களைத் திரட்டவும் எமதுகொள்கைகளை பாமரமக்களுக்கு விளங்கவைக்கவும்பயன்படவேண்டும்" என்று நல்லூர்த் தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு. மு, சிவசிதம்பரம் கோண்டாவில் வடக்கில் கிளைக்காரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்துப்பேசுகையில் கூறினுர்.

கிளைக் காரியாலயங்கள் விடுதலைப் போராட்டத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் மேலும் பேசுகையில் சொன்னுர். (உ)

## தீவிரபிரசாரம்

கொடிகாமம், வெள்ளி

சாவகச்சேரித் தொகுதியின் தமிழ்ஈழஅரசுக்கழகவேட்பாளராகப் போட்டியிடும் திரு. சதாநடராசா சாவகச்சேரித் தொகுதியின் பல பகுதிகளிலும் கட்சிக்கிளைகளை திறந்தும், மாதர் முன்னணி, வாலிபர் கழகங்களை அங்குரார்ப்பணம் செய்து தீவிர பிரசாரவேலைகளில் ஈடுபட்டு வருகின்ருர்.

## இசைவிருந்து



சங்கீத பூசணம் நா. கா. பாமேஸ்வரன் இசைவிருந்து இன்று சனிக்கிழமை மாலை புங்குடுதீவு அப்பலவாணர் அரங்கில் நடைபெறும் கலை விழாவில் இடம்பெறும்.

புங்குடுதீவு ஸ்ரீகணேசவித்தியாலய இசையாசிரியராகிய இவர், அவ்வித்தியாலய அதிபர் திரு. நா. கார்த்திகேசுவின் சிரேஷ்ட புத்திரன் ஆவார்.

## மறுப்பு

ஸ்ரீநகர், ஜுன் 24

தம்மைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டுத தான் பிரதமராக வருவதற்குத் திட்டமிட்டு அதற்காக, முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும், காங்கிரஸ் கட்சியையும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அணுகினுர் என்ற குற்றச்சாட்டை பிரதமர் மொரார்ஜி தேசாய் மறுத்துள்ளார்.

இச்செய்தி டில்லி வட்டாரங்களில் அடிபடுவது பற்றி பத்திரிகையாளர் கேட்டபோது திரு. சரண்சிங் மறுத்துள்ளார், இது முற்றிலும்பொய்யானது" கற்பனையானது என அவர் தெரிவித்தார்.

(கெ-உ)

## நூல் வெளியீடு

சுழிபுரம், வெள்ளி

அருட்கவி சீ. விநாசித்தம்பியினுல் எழுதப்பெற்ற வழக்கம்பரை அம்மன் பதிகம் நூல் வெளியீட்டு விழா 28-ம் திகதி நடைபெறவுள்ளது வழக்கம்பரை சனசமூக புறுளைச் சபையினரால், வெளியிடப்படவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு, ஆசிரியர் கே. நடராசா தலைமை வகிப்பார்.

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

# ஈழநாடு

## தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

## போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ.இல. | தொகுதி | | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | | .................... |
| 80. | வட்டுக்கோட்டை | | .................... |
| 81. | காங்கேசன்துறை | | .................... |
| 82. | மானிப்பாய் | | .................... |
| 83. | கோப்பாய் | | .................... |
| 84. | உடுப்பிட்டி | | .................... |
| 85. | பருத்தித்துறை | | .................... |
| 86. | சாவகச்சேரி | | .................... |
| 87. | நல்லூர் | | .................... |
| 88. | யாழ்ப்பாணம் | | .................... |
| 89. | கிளிநொச்சி | | .................... |
| 90. | மன்னார் | | .................... |
| 91. | முல்லைத்திவு | | .................... |
| 92. | வவுனியா | | .................... |
| 94. | திருகோணமலை | | .................... |
| 95. | மூதூர் | | .................... |
| 96. | கல்குடா | | .................... |
| 97. | மட்டக்களப்பு | (1) | .................... |
| | | (2) | .................... |
| 98. | பட்டிருப்பு | | .................... |
| 100. | சம்மாந்துறை | | .................... |
| 101. | கல்முனை | | .................... |
| 102. | பொத்துவில் | (1) | .................... |
| | | (2) | .................... |
| 103. | புத்தளம் | | .................... |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

தொ.இல. ............ தொகுதி ............ வேட்பாளர் ....................

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

தொ.இல. ............ தொகுதி ............ வேட்பாளர் ....................

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

தொ.இல. ............ தொகுதி ............ வேட்பாளர் ....................

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 84. | உடுப்பிட்டி | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 85. | பருத்தித்துறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 97. | மட்டக்களப்பு | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் 'ஈழநாடு தேர்தல்-77போட்டி' நிபந்தனைக ளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ...............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காள ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையே இப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன் ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக் குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவ தாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும்.

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

பண்ணாகம் ஸ்ரீமுருகன் சன சமூக சேவா வாலிபர் சங்க புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்:- தலைவர்: ச. சிவராஜன், உபதலைவர்: ப. சற்குரு, செயலாளர்: மு. க. நடராசா, உபசெயலாளர்: அ. பாஸ்கரன், பொருளாளர்: அ. இராமலிங்கம். ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட் டது. (கா)

0 0 0

அரியாலை, வெள்ளி

கிறிஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் 22வது வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. டபிள்யு. ஜீ. அன்னப்பா தலைமையில் நடை பெற்றது. புதுவருட நிர்வாகி களாக தலைவர்: த. சண் முகநாதன், உபதலைவர்: ஆர். யே. நவரத்தினம், எஸ். பி. ஜீவானந்தம், செயலாளர்: க. சிவபாதம், உபசெயலாளர்: சி. சிவலிங்கம், பொருளாளர்: செ. வேலாயுதபிள்ளை ஆகியோ ரும், நிர்வாகசபை உறுப்பி னர்களாக திருவாளர்கள் ஆறு முகம், சி. கிருஷ்ணர், புண் ணியலிங்கம், வி. சுப்பிரமணி யம், எஸ். பொன்னுத்துரை, சி. துரைராசா, சற்குணராசா, கே. பாலசுப்பிரமணியம், திரு மதி இரத்தினராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மூடிக்கிடக்கும் விறகுகாலை !

சங்கானை, வெள்ளி

மரக்கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கிவரும் வட்டுக் கோட்டை விறகாலையில் விற் பனைக்கு விறகுகள் இருந்தும், விறகாலை பூட்டப்பட்டிருக்கி றது. பலகிராமங்களிலிருந்தும் வண்டிகளில் விறகு வாங்க வரும் மக்கள் பெரும் ஏமாற் றத்துடன் வீடுதிரும்புகின்ற னர்.

இங்கு வழமையாகக் கடமை புரியும் உத்தியோகத்தர் விடு முறையிலிருப்பதால், அவருக் குப் பதிலாக யாழ். தலைமைக் கந்தோரிலிருந்து எந்த உத்தி யோகத்தரும் அனுப்பிவைக் கப்படாததினாலேயே விறகாலை பூட்டப்பட்டிருக்கிறதாம். இதுபற்றி மக்கள் இப்பகுதி ஊர்ஆட்சிமன்றத்திற்கும் சம் பந்தப்பட்ட மேலிடத்திற்கும் புகார் செய்துள்ளனர்.

## வருடாந்தக் கூட்டம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

அகில இலங்கை சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் 42ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 27-ம்திகதி காலை யாழ்ப்பாணம் வீரசிங் கம் மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. (க)

## விவசாயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

மன்னார் மாவட்டத்திலுள்ள இலுப்பைக் கடவை, விடத் தல்தீவு ஆகியவற்றின் விவ சாய விளைவுப் பெருக்கக்குழுக் களுக்கும், பயிர்ச்செய்கைக் குழுக்களுக்குமான கருத் தரங்கு இலுப்பைக் கடவை கமத்தொழில் சேவை நிலையத் தில் மாவட்ட உதவிப் பணிப் பாளர் திரு. கே. சண்முக நாதன் தலைமையில் நடை பெற்றது.

இக்கருத்தரங்கில் கமத் தொழில் சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர்களான திரு வாளர்கள் ஆர். ராஜேந்திரா, எம். எல். எம். இக்பால், கே. சண்முகநாதன், என். யோக நாதன் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி குழுவின் கடமைகள் பற்றி விரிவுரை யாற்றியதுடன் விவசாயிகள் கேட்ட கேள்விகளுக்கும் விடை யளித்தார்கள். இக்கருத்தரங் கில் அப்பகுதியின் நிறைவேற் றுப பொறியியலாளர், இலங்கை வங்கி முகாமையாளர், விவசாயப் போதனாசிரியர் ஆகி யோரும் கலந்துகொண்டனர். (கா)



யாழ். ரோட்டரி மாதர் கழகத்தின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு நடைபெறுகின்றது. திருவாளர்கள் க. கனக ராசா, போல் ராசநாயகம், ரோட்டரி கழகத் தலைவர் குணரத்தினம், மாதர்கழகத் தலைவி திருமதி சோ. சண் முகலிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## ரோட்டரி மாதர் கழகம் நடாத்திய சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், சனி

ரோட்டரிச்சங்கத்தின் யாழ். கிளை மாதர் கழகத்தின் அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு வைபவம் சில தினங்களுக்கு முன் யாழ். இன்ஸ் விடுதியில் நடைபெற்றது. ரோட்டரிச் சங்கத்தின் யாழ். கிளைத் தலை வர் திரு. ஆர். ஜே. குணரத் தினம் தலைமை வகித்தார்.

மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா, திரு. போல் ராச நாயகம் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மாதர் சங்கத் தலைவி திரு மதி சோமா சண்முகலிங்கம் வரவேற்பரை நிகழ்த்தினார். இந்தச் சீட்டிழுப்புக்கான உத விகளையும், பரிசுகளையும் வழங் கியவர்களுக்கும், ரோட்டரிச் சங்க உறுப்பினர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் களை அவர் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் திரு. கனக ராசா பேசும்போது, ரோட்டரி மாதர் கழகம் செய்துவரும் சேவைகளை வெகுவாகப் பாராட்டினார்.

சீட்டிழுப்பின் மூலம் கிடைத்தவருமானத்தில் 500/- ரூபாவை அண்மையில் சுன்னா கப் பகுதியில் ரயில் விபத்தில் கால்களை இழந்த சிறுமியின் எதிர்கால நலனுக்காகப்பயன் படுத்துவதென்றும், மேற் கொண்டும் உதவிகள் புரிவ தென்றும் ரோட்டரி மாதர் கழகம் முடிவுசெய்துள்ளது.

## 'தமிழ்ஈழக் கொள்கையை அரசு தடைசெய்தால் சட்டவிரோதப் போராட்டம்''

— பண்டிதர் கா. பொ.

யாழ்ப்பாணம், சனி

''தமிழ்த் தேசிய இனம் இத் தேர்தலை சர்வசனவாக்கெடுப் பாகப் பயன்படுத்தி உலக அரங்குக்குக் காட்டுகிறதே ஒழிய, பாராளுமன்ற ஆசனங் களைக் கைப்பற்றுவதற்கல்ல. தேர்தலின் பின்னர் மக்கள் சம்மதத்துடன் ஒரு தமிழ் ஈழக் குடியரசை நிறுவுவதற்கு, ஒரு யாப்பைத் தயாரித்து பிரிவ தற்கான வழியைத் தீவிரமாக மேற்கொள்ளும்.'' புங்குடுதீவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி கொள்கை விளக்கக் கூட்டத்தில் பேசிய திரு. ஐ. கணேசன் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டம் புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் பிள்ளை யார் கோவிலடியில் நடைபெற் றது. இக்கூட்டத்திற்கு திரு. ஆ. பொன்னம்பலம் தலைமை தாங்கினார்.

திரு. ஐ. கணேசன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறிய தாவது:-

''பாராளுமன்ற அமைப்பு முறையை பகிஷ்கரிக்காமல் சட்டமன்றவிரோத நடவடிக் கையாக, தனியரசு அமைக்கும் பணியில் ஈடுபடுவார்கள். தனிநாடு அமைக்க எம்மிடம் திட்டமிருந்தாலும் சர்வதேச உதவிகளுடன்தான் அமைக்க முடியும்''

பண்டிதர் கா. பொ. இரத் தினம் உரையாற்றுகையில், 'மக் களிடம் இன விடுதலையைப் பெற்றுத்தருவோமென கூறி வருகின்றோம். இனவிடுதலையை நாம் தனி நாட்டின்மூலம்தான் பெறலாமென்ற கொள்கை யைப் பிரகடனப்படுத்தியுள் ளோம். இக்கொள்கையை இனிவரும் அரசாங்கம் தடை செய்யுமானால், சட்டவிரோத மாகப் போராட வேண்டி வரும்'' என்று கூறினார்.

இக்கூட்டத்தில் திருவாளர் கள் கா. தர்மலிங்கம், எஸ். கே. மகேந்திரன், ச. மகாலிங் கம், சு. ஏரம்பு, கை. குமார சாமி உட்படப் பலர் உரை யாற்றினர். (செ)

## 'தமிழ்ஈழமே எமது இலட்சியம்'

கிளிநொச்சி, வெள்ளி

''கடந்த தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராகக் கிளிநொச்சியில்போட்டியிட்டு, வெற்றி பெற்று, இரண்டு ஆண்டுகள் அரசுடன் இணைந்து எனது தொகுதிக்கு என்னால் இயன்ற சேவைகளையும், மக்க ளுக்கு உதவியையும்செய்தேன். பின். அரசினரின்போக்கு தமிழ் மக்களுக்குப்பெரும் படுகுழியை உண்டாக்குகிறது என்பதனை உணர்ந்து, ஒற்றுமையான இயக்கத்தின் கீழ்விடுதலை பெற வேண்டும்என எண்ணித் தமிழர் கூட்டணி உதயமாவதற்குப் பெரும் பணியாற்றினேன்''

பூநகரி வாடியடியில் நடை பெற்றதேர்தல் பிரசாரக் கூட் டத்தில் தமிழர் விடுதலைக் கூட் டணிவேட்பாளர் திரு. ஆனந்த சங்கரி மேற்கண்டவாறு கூறி னார்.

திரு. ஆ. சதாசிவம் தலைமை யில்நடைபெற்றஇக்கூட்டத்தில் அவர்தொடர்ந்து பேசுகையில், ''எனது படிப்பைக் கொண்டு நான் நிறையச் சம்பாதித்தி ருக்கலாம். ஆனால் என் நலம் கருதாது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவுகாணும் பாதையில் போராடும் இயக் கத்துடன் எனது சேவையைச் சங்கமமாக்கி வருகிறேன்.

இன்று தமிழ் மக்களுக்கு ஏற் பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ் ஈழம் காண் பதே ஒரேவழி. சிங்கள ஆட் சியாளரின் ஏகாதிபத்தியப் போக்கால், 'இன்று தமிழன் தன் இராச்சியங்களை ஆள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளான்'' என்றார்

வெற்றிகரமான 50-வது தினம்

ராஜா (யாழ்நகர்) போன்: 7180 தினசரி 4 காட்சிகள்

தேவரின்

## திருவருள்

(ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

54-வது நாள்

ராணி (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர்.—லதா (இருவேடங்கள்) நடித்த தினசரி 4 காட்சிகள்

## நாளை நமதே

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ். நகர்] பானுமதி நடித்த தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்

## கானல்நீர்

லிடோ போன்: 7693 (யாழ்.நகர்) (புதிய பிரதி) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45 ஜெய்சங்கர் நடித்த

## வல்லவன் ஒருவன்

சாந்தி யாழ். நகர் தினசரி 4 காட்சிகள் போன்: 7642 10-30, 2-30, 6-30, 9-45

ஃ சிவாஜி ஃ விஜயா ஃ ராஜம்மா ஃ ரங்கராவ் நடித்த

K. S. கோபாலகிருஷ்ணனின்

## செல்வம் (புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி மற்றும் பலர் திறம்பட நடித்த

ஈழத்திரையோவியம்

ஜெயேந்திரா மூவிஸ்

## காத்திருப்பேன் உனக்காக

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.

The sexiest comedy hit of the year

WARREN HITCHELL

In

## All The Sexy Way Up

(color) (Strictly adults)

மனோகரா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் சிவாஜி (இருவேடங்களில்) நடித்த

## மனிதனும் தெய்வமாகலாம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி - பத்மப்பிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

## ஸ்ரீதரின் வைரநெஞ்சம்

(ஈஸ்ட்மன் கலர்)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வெளிநாடு செல்லவிருக்கும் ஒருவரது, பிலிப்ஸ் ரேடியோ, மேசை, மணிக்கூடுகள், கமரா (Box Camera) மின்சார உபகரணங்கள், மேசை விளக்கு, கொலம்பியா கிராமபோன், சைக்கிள், ஆகியன விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நல்லையா, ப்ளவர் கொட்டேச், உடுவில். 6530

### சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### சாக்கு விற்பனை

இச்சங்கத்திலுள்ள 4500 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளைச் சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தில் 2-7-77 மு. ப. 11-00 மணிக்குமுன் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் மெழுகிட்ட தபாலுறையில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" என எழுதி அனுப்பவேண்டும். கேள்விப் பத்திரங்களை வைப்புப்பணம் ரூபா 300/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூ. 5/-ம் செலுத்தி 1-7-77 வரை சங்கத்தில்பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.
சாவகச்சேரி,
23-6-77. 6532

### யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

### அறிவித்தல்

### அரை வருட இருப்புப் பரிசோதனை

எமது சங்கத்தின் அரை வருட இருப்புப் பரிசோதனையை முன்னிட்டு 2-7-'77 சனிக்கிழமை கிளை ஸ்தாபனத்தின் வியாபாரம் நடைபெற மாட்டாது.

பாவனையாளர்கள் தங்கள் பங்கீட்டுப் பொருட்களை 2-7-'77க்கு முன்பதாகப் பெற்றுக்கொள்ளவும்.

பாவனையாளர்களின் வசதியை முன்னிட்டு 30-6-'77 வியாழக்கிழமை (போயா தினம்) எமது கிளை ஸ்தாபனங்கள் வியாபாரத்திற்காகத் திறந்திருக்கும்.

பொதுமுகாமையாளர்.
74/3, அல்பிரட்துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
22-6-77. 6489

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
முத்துராமன் - சுஜாதா
**வாழ்ந்து காட்டுகிறேன்**

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராஜன் - பிரமிளா
**வீட்டு மாப்பிள்ளை**

நாகம்ஸ் (அன்ருகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா நடித்த
**தங்கப்பதக்கம்**

### தவறிவிட்டது

சென்ற 20-ந் திகதி நல்லூர் முத்திரைச்சந்தை பஸ்தரிப்பில் உறையுடன் மூக்குக்கண்ணுடி தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து ஒட்டகப்புலம் முறிவு வைத்தியர் செல்லப்பா சமத்தருடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 6529

### தேவை

எலுமிச்சம்பழக் கோதுகள் நன்கு காய்ந்தது தேவை. மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6523

### விற்பனைக்கு

எம்மிடம் உங்கள் கடைக்குத் தேவையான வியாபாரப் பொருட்கள் விற்பனைக்குண்டு. நேரிலும் வினியோகிக்கப்படும். தொடர்பு கொள்க: ரி. எம். சேவைகள், 72, காரை நகர் வீதி, யாழ்ப்பாணம். 6525

## "உதவிய கையை உதறி விடாதீர்"

கிளிநொச்சி, வெள்ளி

'கிளிநொச்சித் தொகுதியின் அபிவிருத்திக்காக 5 ஆண்டுகள் அயராது பாடுபட்டு உதவிய கையை உதறிவிடாது பலப்படுத்தவேண்டியது கிளிநொச்சித் தொகுதி மக்களின் தலையாய கடனுகும்'

இவ்வாறு கிளிநொச்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் அமைச்சர் செ. குமாரசூரியரை ஆதரித்து நடந்த கருத்தரங்கில் திரு. இ. பிரேமகாந்தன் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், விவசாயப் பிரதேசமான கிளிநொச்சியை மகாவலிநீர் மூலம் வளம்படுத்தவேண்டும் என அமைச்சர் குமாரசூரியர் அயராது பாடுபட்டுவருகிறுர். இதனுடன் இத்தொகுதியின்வேலை இல்லாப் பிரச்னை, தபால் தந்திப் பிரச்னை நிலப்பிரச்னை, போன்றவற்றிற்கு தீர்வு கண்டிருக்கிறுர் என்றுர்.

பி. நவநீதராசா, மா. சு. தம்பிநாயகம், திருவருட்தேவன் ஆகியோரும் பேசினர்.

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## கேள்விப் பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கும் இந்நகராட்சி மன்றச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

1. 5-ம் வட்டாரம் யாழ்ப்பாணம் வீதியிலுள்ள மடம் திருத்தல்.
2. பெருங்குளம் வீதிக்கு பருத்தித்துறை வீதி டச் வீதியை இணைக்கும் பகுதிக்கு தார் போடல்-வட்டாரம் - 10.
3. சிவன்கோவில் வீதிக்கு தார் போடல்-வட்டாரம்-7.
4. பொலிஸ் நிலைய வீதிக்கு தார்போடல்-வட்டாரம்-7.
5. வங்களா வீதிக்கு தார் போடல்-வட்டாரம்-2.
6. புதுச்சந்தை வீதிக்கு தார் போடல்-வட்டாரம்-1.
7. பெருங்குளம் பிள்ளையார் கோவில் வீதிப் பக்கத்திற்கு மண் நிரப்புதல்-வட்டாரம்-4.

கேள்விப்பத்திரங்கள் 8-7-77-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும் கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற் பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என விலாசமிட்டு யூலை மாதம் 12-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு முன் இந்நகராட்சி மன்றத்தின் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்படவேண்டும். அல்லது அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும், விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்
அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
22-6-77. 6533

## பரத நாட்டியம்

புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் நடைபெறும் மாபெருங்கலை விழாவின் மூன்றும் நாள் 26-6-77 ஞாயிற்றுக்கிழமை மாலை 8-00 மணிக்கு

ஸ்ரீமதி கல்யாணி சுந்தரலிங்கம்

அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. 6531

REGAL (JAFFNA) Daily: at 10-30, a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m. only

Dicing with Danger, Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye- CatchingGirls... and Ruthless Crooks.

Tony Curtis - Roger Moore - Susan George

in

## "Mission Monte Carlo"

(Color) (Action Packed Film)

ஈழநாடு
The EELANADU

“தமிழ்ஈழத்தை

# இந்தியாவுடன் இணைக்க முயற்சி எடுப்பேன்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெற்றதும் சட்டத்தை மீறி படகில் ஏறி தமிழ்நாடு சென்று எங்கள் தமிழ் ஈழத்தை, இந்தியாவுடன் இணைக்கும்படி கோருவேன்''

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும், லங்கா பாரத ஒற்றுமை முன்னணி அபேட்சகர் டாக்டர் ஆ. தர்மலிங்கம், பாஷையூரில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

பாஷையூர் 2-ம் குறுக்குத் தெருவில், திரு. எம். பாவிலுப்பிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் டாக்டர் தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:

'25 வருட காலத்துக்குள் ஒரு கட்சி தனது இலட்சியத்தில் சிறிதளவாவது முன்னேறி விட்டால் அதனால் எந்தவித பயனும் இல்லை. மகாத்மா காந்தி வெள்ளையரோடு போராடி சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். பம்பாய் மாகாணம் என்று குஜராத்தும், மகராஷ்டிரமும் இணைந்திருந்த போது மகராஷ்டிரர்கள் போராடி தனி மாகாணம் பெற்றார்கள். நாகலாந்தும் இப்படியே தனியாட்சி பெற்றது. கிழக்கு பாகிஸ்தானும் முஜிபுர் ரகுமானின் கீழ் போராடி வென்றது. ஹோசிமின்னும் ஜப்பானியருக்கெதிராக போராடி வென்றார். மாசேதுங்கும் சியாங்கே சேக்கை தோற்கடித்தார்.

'சைப்பிரஸ் தீவில் இன்று கிரேக்க சைப்பிரஸ் காரர் எனவும், துருக்கிய சைப்பிரஸ் காரர் எனவும் இரண்டு இனச் சமஷ்டி ஏற்பட்டுள்ளது. இது ஏற்பட பிஷப் மக்காரியோஸ்சைப்பிரசைகிறீசுடன் இணைக்க வேண்டும் என்று போராடியதே காரணமாயிற்று.

இந்திய மாநிலங்களோடு 32-வது மாநிலமாக 'தமிழ்' ஈழத்தைப் பிரித்து இணைக்கப் போராட வேண்டும். சிங்களப்பகுதி தனித்து இயங்கினால் இந்து சமுத்திரத்தில் அமைதியின்மை ஏற்படும். ஆகவே அதனையும் 33-ம் மாநிலமாக பின்னர் இணைத்துக் கொள்ளலாம். (கூ)

## இன்னும் துலங்கவில்லை

யாழ்ப்பாணம், சனி

யாழ். பெரியாஸ்பத்திரியில் இருந்து கடந்த திங்கட்கிழமை காலை காணாமல் போன குழந்தை பற்றிய மர்மம் இன்னமும் துலங்கவில்லை.

கடந்த இரவுவரை இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ்.குற்றத்தடுப்பு பொலிசார். இது பற்றி தொடர்ந்தும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தையின் தாய் தொடர்ந்தும் ஆஸ்பத்திரியிலேயே இருந்து வருகின்றார்.

இதனால் யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏறபட்டுள்ளது. (இ)

## நல்லூர்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நபர்கள் பாவித்ததாகக் கூறப்படும் சைக்கிளிலும், கைரேகை அடையாளங்களை படம்பிடித்துக் கொண்டனர்.

சம்பவம் நடைபெற்றஇடங்களையும் பொலிசார்படம்எடுத்தனர்.

### சன்மானம்

சம்பவம் நடைபெற்ற சில மணி நேரத்திற்குள், 3சந்தேக நபர்களை மடக்கிப்பிடித்த நல்லூர் ப. நோ. கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் சங்க நெறியாளர்சமுசன்மானம் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட 3 சந்தேகநபர்களும் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

## கிளிநொச்சிக்கு பொலிசார் விரைவு!

இக்கொள்ளை தொடர்பாக கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து பொலிசார்நேற்று கிளிநொச்சிப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

கைரேகை நிபுணர்களான திரு. அதிகாரி. திரு. பெர்னண்டோ ஆகியோர் கிராமிய வங்கியில் படம்பிடித்துச் சென்றுள்ளனர். (க)

## ஆலயப் பிரவேசம்

யாழ்ப்பாணம், சனி

கோண்டாவில் வடக்கு அன்னுங்கை சிவபூதவராயர் ஆலயத்தில் நேற்று சிறுபான்மை மக்களும் உட்சென்று வணங்க அனுமதிக்கப்பட்டது.

அவ்வூர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆலய நிர்வாகசபையின் ஒத்தாசையுடன் இந்த ஆலயப்பிரவேசம் நடைபெற்றது. (இ)

## வேட்பாளர் புகார்—

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ஒரு அபேட்சகருக்கு மாறாக எழுதப்பட்டிருந்தால் அந்த அபேட்சகர் அதனை அழிக்கலாமா என திரு. அம்பலவாணர் கேட்டபோது அபேட்சகருக்கு மாறாக பொது இடங்களில் எழுதப்பட்டிருந்தால், அந்த அபேட்சகர்அதனை அழிக்கலாம், என்று பொலிஸ் அதிபர் கூறினார்.

கிளைகள் திறந்தால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் பொலிஸ் அதிபர் கூறினார்.

கூட்டம் நடைபெறும் இடத்திலும் கூட்டம் பற்றி அறிவிப்பதற்கும், அபேட்சகர் ஒருவர் தன் தொகுதி பாவிப்புக்கு மட்டும், ஒலிபெருக்கியை பாவிக்கலாம் என்றும் கட்சித் தலைவர்களும் ஒலி பெருக்கியை பாவிக்கலாம் என்றும் இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் பிரசாரங்கள் அமைதியாக நடைபெற பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென பொலிஸ் அதிபர் அபேட்சகர்களைக் கேட்டுக்கொண்டார். பொலிஸாரும்சகலஉதவிகளையும்வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கூறினார். (க)

### உதயசூரியன் பட்டி

ஊர்காவற்றுறையில் கூட்டணி வேட்பாளராக போட்டியிடும், பண்டிதர் க. பொ. இரத்தினம் அவரது சேட்டில் 'உதயசூரியன்' பட்டி அணிந்திருப்பதாக ஊர்காவற்றுறையில் சமசமாஜக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. கனகரத்தினம் பொலிஸ் அதிபருக்கு சுட்டிக்காட்டி அது சட்டவிரோதமானது என்றார்.

2-ம் வரிசையில் பண்டிதர் க. பொ. இரத்தினம் அமர்ந்திருந்தார். நல்லூர் சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. சி.அருளம்பலமும் குறுக்கிட்டு அது சட்டவிரோதமானது என்று தெரிவித்தார்.

அது சட்டவிரோதமானதா என பொலிஸ் அதிபரிடம் கேட்கப்பட்டபோது பட்டி அணிவது சட்டவிரோதமானதென்றும் அபேட்சகர்கூட பட்டி அணியக்கூடாது என்றும் பொலிஸ்அதிபர் தெரிவித்தார். (க)

## இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், சனி

சுண்டிக்குழி சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல், முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்புதிய கட்டடத்தை யாழ். அரசாங்க அதிபர் திரு லால் விஜயபாலா திறந்து வைக்கிறார். (இ)

## மரண அறிவித்தல்
## Dr. R. S. பூலோகசிங்கம்

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய Dr. R. S. பூலோகசிங்கம் காலமானார். இவர் திருமதி பொன்னம்மாவின் அன்புக்கணவரும் திரு. P. குமாரசாமி (இளைப்பாறிய S/A. C. C. D ) திரு. P. வெற்றிவேலு (சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர்) திரு. P. சுந்தரலிங்கம் (P. W. D. ஓமந்தை) செல்வநாயகி, வேதநாயகி, ஆசிரியை இராசநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், சட்டத்தரணி சதா ஸ்ரீனிவாசன், ஆசிரியர் கனகசபாபதி அபயசிங்கி (லண்டன்), பரமசுந்தரி, ஆசிரியை நாகேஸ்வரி, நீலாம்பிகை ஆகியோரின் மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் 25-6-77 சனி பி ப. 4-00 மணிக்கு நடைபெறும், நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்
6538



செல்வி பிருந்தா கங்காதரனின் பரதநாட்டியநிகழ்ச்சி இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் திரு. இ. சண்முகம் ஜே. பி. தம்பதிகள் தலைமையில் நடைபெறும். இவர் ஜெயலக்ஷ்மி சுந்தையாவின் மாணவியாவார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 620வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**48 B 0413**
ரூ. 1,00,000

இரண்டாவது பரிசு
**08 J 0877**
ரூ. 40,000

மூன்றாவது பரிசு
**23 U 0129**
ரூ. 10,000

தலா 1,200 ரூபா ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 02 A 0190 | 28 A 0707 |
| 37 A 0426 | 56 A 0936 |
| 58 A 0924 | 15 B 0759 |
| 39 B 0987 | 43 B 0485 |
| 31 C 0146 | 42 C 0746 |
| 07 D 0393 | 34 D 0088 |
| 36 0765 | 52 E 0269 |
| 09 F 0650 | 34 F 0744 |
| 35 F 0449 | 40 F 0783 |
| 57 F 0825 | 20 G 0362 |
| 30 G 0002 | 32 G 0802 |
| 39 G 0106 | 49 G 0486 |
| 58 G 0485 | |
| 32 H 0558 | 50 H 0345 |
| 17 J 0621 | 21 J 0269 |
| 26 J 0175 | 40 J 0671 |
| 41 J 0324 | 54 J 0516 |
| 07 K 0691 | 09 K 0478 |
| 42 K 0822 | 59 K 0460 |
| 14 L 0227 | 18 L 0708 |
| 18 L 0915 | 25 L 0844 |
| 29 L 0029 | 08 M 0972 |
| 09 M 0072 | 22 M 0145 |
| 24 M 0741 | 52 M 0845 |
| 19 N 0946 | 23 N 0469 |
| 41 N 0091 | 45 N 0416 |
| 01 O 0646 | 29 O 0462 |
| 33 O 0659 | 11 P 0540 |
| 40 P 0304 | 45 P 0073 |
| 47 P 0897 | |
| 46 Q 0230 | 29 R 0449 |
| 33 R 0009 | 51 R 0746 |
| 54 R 0286 | 09 S 0938 |
| 29 S 0178 | 31 S 0315 |
| 33 S 0450 | 41 S 0901 |
| 47 S 0954 | 60 S 0088 |
| 34 T 0066 | 34 T 0960 |
| 21 U 0717 | 46 U 0893 |
| 03 V 0481 | 18 V 0680 |
| 21 V 0940 | 22 V 0620 |
| 23 V 0356 | 41 V 0645 |
| 43 V 0060 | 60 V 0485 |
| 14 W 0270 | 21 W 0785 |
| 31 W 0546 | 34 W 0874 |
| 41 W 0232 | 08 X 0711 |
| 15 X 0890 | 18 X 0629 |
| 54 X 0633 | 09 Y 0879 |
| 14 Y 0587 | 19 Y 0420 |
| 29 Y 0547 | 40 Y 0644 |
| 50 Y 0651 | 19 Z 0060 |
| 40 Z 0206 | 45 Z 0650 |

இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) (ம-இ)

## குருநகரில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த கைத்தாம்பிள்ளை சின்னராசா என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார்

பலத்த வாள்வெட்டுக் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே அந்தநபர் மரணமானார்.

இக்கொலை தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ராஜா என்பவரையும் அவரது மகன் செல்லத்தம்பியையும் பொலிஸார் தேடி வருகின்றனர். இவர்கள் இருவரும் தலைமறைவாகி விட்டனர்.

இக்கொலை பற்றிய விசாரணையை குருநகர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எச் எம். ஜி. கேவாவும், சார்ஜண்ட் திரு. கே. ரூபசிங்காவும் நடாத்தி வருகின்றனர். (கூ-இ)

## ரயில்வே—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கம்செய்யப்பட்டதை ஆட்சேபித்தே காட்மார் அநேகர் இன்று வைத்தியலீவில் சென்றனர் என்று கூறப்பட்டது.

போக்குவரத்து அமைச்சு அதிகாரிகளுடன் பகல் 12 மணிக்கு நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து ஏற்பட்ட இணக்கத்தின் பின் காட்மார் தமது வைத்தியலீவை ரத்துச்செய்து பகல் 1-30க்கு வேலைக்கு திரும்பினர்.

அதன்பின் சகல ரயில் சேவைகளும் வழமைபோல் இயங்குகின்றன.

### யாழ்ப்பாணத்திற்கு...

இதன் காரணமாக இன்று காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் யாழ் தேவி கடுகதியும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. (ம-இ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna Telegram Eelanadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.